பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் அரசு சிமெண்ட்.



# இடம் பொருள் கலைஞர் 57





# அரசு சிமெண்ட்

## காலம்தோறும் தொடரும் வலிமையான உறவு!



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், சிமெண்ட்டுக்கும் அப்படி ஒரு பொருத்தம். திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட பிறகு, அதன் வரலாற்றில் மிக முக்கியமான திருப்புமுனைப் போராட்டம் என்று சொன்னால், அது 'மும்முனைப் போராட்டம்'தான்.

அந்தப் போராட்டம், கலைஞரின் பொதுவாழ்க்கையிலும் மிகப் பெரிய திருப்புமுனையாக இருந்தது. ஆம்... அந்த மும்முனைகளில் ஒரு முனை கல்லக்குடி. அங்குதான் 'டால்மியா' எனும் சிமெண்ட் தொழிற்சாலை, பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ண டால்மியா என்பவரால் நடத்தப்பட்டு வந்தது. எனவே, அந்த ஊருக்கு 'டால்மியாபுரம்' என்று பெயர் மாற்றப்பட்டது.

வட இந்தியர்களால் தமிழர்கள் தங்கள் அடையாளத்தை இழந்துவிடக் கூடாது என்பதற்காக, அந்தப் பெயர் மாற்றத்தை எதிர்த்து கலைஞர் அவர்கள் தலைமையில் போராட்டம் நடைபெற்றது. தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்தது, தடியடி, துப்பாக்கிச் சூடு, சிறைத்தண்டனை எனப் பல இன்னல்களுக்குப் பிறகு போராட்டம் வெற்றி பெற்றது. அதைத் தொடர்ந்தே கலைஞருக்கு, **'கல்லக்குடி கொண்டான்'** என்ற பட்டம் கிடைத்தது. 1947-இல் அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி அளித்த **'கலைஞர்'** எனும் பட்டப் பெயருக்குப் பிறகு, கலைஞருக்குப் பொதுவாழ்வில் கிடைத்த இரண்டாவது பட்டம். கட்சி சார்ந்த அரசியலில் முதல் பட்டம்..!

சுமார் 17 ஆண்டுகள் கழித்து, அவரது ஆட்சிக் காலத்தில்தான் தமிழ்நாட்டில், மாநில அரசால் தொடங்கப்பட்ட முதல் சிமெண்ட் தொழிற்சாலை எழும்பியது. ஆனால், அது பலருக்கும் தெரியாதபடி 'எமர்ஜென்ஸி' 'எதிர்க்கட்சி', 'ஆளுநர் ஆட்சி' என பூசி மெழுகப்பட்டுவிட்டது. அந்த வரலாற்றைக் கொஞ்சம் தூசி தட்டலாமா?

### வளர்ச்சிக்கு உதவிய மூலப்பொருள்

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு உள்கட்டமைப்பு முக்கியம் என்றால், அந்த உள்கட்டமைப்புக்கு முக்கியம் சிமெண்ட். அந்த சிமெண்ட்டுக்கு உற்பத்தி அளவு, வாங்கும் அளவு, விலை, புதிய தொழிற்சாலை ஏற்படுத்த 'கோட்டா' எனப் பல கட்டுப்பாடுகளை ஒன்றிய அரசு ஒரு காலத்தில் வைத்திருந்தது.

1960-களில் நாட்டிலேயே சிமெண்ட் உற்பத்தியில் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்தது தமிழ்நாடு. ஆம்... அன்று தமிழ்நாட்டில் ஆறு தனியார் சிமெண்ட் தொழிற்சாலைகள் இருந்தன. அன்று இந்தியாவில் ஆண்டு ஒன்றுக்கு 170 இலட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி ஆனது என்றால், தமிழ்நாட்டில் அது 27 இலட்சம் டன் ஆக இருந்தது. கூடுதலாக 20 இலட்சம் டன் உபரியாகக் கிடைத்து வந்தது. தமிழ்நாட்டுக்கு அடுத்த இடங்களில் ஆந்திரம் (17 இலட்சம் டன்) மற்றும் கர்நாடகா (16 இலட்சம் டன்) மாநிலங்கள் இருந்தன.

தமிழ்நாட்டில் உற்பத்தியான உபரி சிமெண்ட், மேற்கு வங்கம், பஞ்சாப், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டது. அப்போது, தனியார் சிமெண்ட் நிறுவனங்களின் லாப வெறியைக் கட்டுப்படுத்த, எல்லா மாநிலத்திலும் ஒரே விலையில் விற்க வேண்டுமென்று, ஒரு திட்டத்தை ஒன்றிய அரசு அமல்படுத்தியிருந்தது.

ஆனால், சிமெண்ட் உபரியாக உற்பத்தியானதால் 1970 ஜனவரி முதல் அந்தச் 'சிமெண்ட் கட்டுப்பாட்டு விதி'யை ஒன்றிய அரசு நீக்கிவிடத் தீர்மானித்தது. அவ்வாறு நீக்கியிருந்தால், அந்த உபரி சிமெண்ட்டையும் தனியார் நிறுவனங்கள் வேறு மாநிலங்களுக்கு விற்பனை செய்திருக்கும். இதனால், தமிழ்நாட்டில் சிமெண்ட்டுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும். தட்டுப்பாடு ஏற்பட்டால், வளர்ச்சிப் பணிகள் எல்லாம் பாதிப்புக்கு உள்ளாகும். இதை உணர்ந்துகொண்ட கலைஞர் அவர்கள், அன்றைய பிரதமரிடம் நிலைமையை எடுத்துக் கூறினார். அதில் வெற்றியும் கண்டார்.

### 'அரசு'வின் வலிவும் வனப்பும்

ஆனால், எவ்வளவு காலத்துக்குத்தான் தனியார் சிமெண்ட் தொழிற்சாலைகளையே சார்ந்திருப்பது? கலைஞர் அப்படி யோசித்ததன் விளைவுதான், ஆலங்குளத்தில் ( விருதுநகர் மாவட்டம் ) தமிழ்நாடு அரசின் சிமெண்ட் தொழிற்சாலை, 6.77 கோடி ரூபாய் செலவில், 1970-ஆம் ஆண்டு ஜூன் 14 அன்று அமைக்கப்பட்டது. அன்று அந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான சுண்ணாம்புக் கற்களைத் தோண்டி எடுக்க, அரசு வாங்கிய நிலத்தின் பரப்பளவு 1,416 ஏக்கர்கள். தொழிற் கூடமும் குடியிருப்புகளும் இருந்த பகுதியின் அளவு 287 ஏக்கர்கள்.

> 1966-ஆம் ஆண்டு நிலவரப்படி இந்தியாவில் ஒரு நபர் பயன்படுத்தும் சராசரி சிமெண்ட் அளவு 22 கிலோவாக இருந்தது. ஆனால், சுவிட்சர்லாந்தில் இந்த அளவு 700 கிலோவாகவும், பிரான்ஸில் 451 ஆகவும், இத்தாலியில் 426 ஆகவும், ஜப்பானில் 365, அமெரிக்காவில் 342 ஆகவும், இங்கிலாந்தில் 305 ஆகவும் இருந்தது. இந்த பின்னணியில் யோசித்து பார்த்தால், அன்று தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்கு எவ்வளவு சிமெண்ட் தேவைப்பட்டிருக்கும் என்று நம்மால் யூகிக்க முடியும்.

நாள் ஒன்றுக்கு 1,200 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் திறனை அன்று அந்தத் தொழிற்சாலை கொண்டிருந்தது. அது உற்பத்தி செய்த சிமெண்ட், 'அரசு சிமெண்ட்' எனும் பெயரில் விற்பனை செய்யப்பட்டது. தொடக்கத்தில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) கீழ் இயங்கி வந்த இந்தத் தொழிற்சாலை, பின்னர் 1976-இல் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் (டான்செம்) கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.




### நினைத்தார் கர்மவீரர்... நிறைவேற்றினார் கலைஞர்..!

இந்தத் தொழிற்சாலை குறித்துப் பின்னாளில் கலைஞர் பேசும்போது, "இராமநாதபுரம் மாவட்டத்தில், சிவகாசி, இராஜபாளையத்திற்கு இடையிலான ஆலங்குளம் கிராமத்தில் சிமெண்ட் தயாரிப்புக்கான தாது கற்கள் இருப்பது, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்தலைவர் காமராஜர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் அன்றைய தலைவர் ரா.கிருஷ்ணசாமி நாயுடு மற்றும் சட்டமன்ற உறுப்பினராக இருந்த எஸ்.ஆர். நாயுடு போன்றவர்கள், இத்திட்டத்தைக் கொண்டுவர முயற்சி செய்தும் திட்டம் செயல்பாட்டுக்கு வரவில்லை.

1970-ஆம் ஆண்டு நான் முதல்வராக இருந்தபோது, அந்த மாவட்டத்தைச் சேர்ந்த கா.காளிமுத்து, பெ.சீனிவாசன், சிவகாசி சட்டமன்ற உறுப்பினராக இருந்த அழகுதேவர் ஆகியோரின் வேண்டுகோளை ஏற்று, ஆலங்குளம் சிமெண்ட் ஆலை நிறுவி, அதனைத் திறந்து வைத்தேன்" என்றார்.

அதன் பிறகு, கிராமப் புறங்களாக இருந்த அந்தப் பகுதி, வணிகமயமும் வேலை வாய்ப்பும் உள்ள பகுதியாக மாறியது. ஆனால், கூடவே அங்குள்ள விவசாய நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள், குடிநீர் ஆகியவை மாசடைந்தன. இந்நிலையில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இந்த ஆலையைத் தனியாருக்கு விற்றுவிடலாம் என்ற திட்டமும் இருந்தது.

மாசுபாட்டைக் குறைப்பது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டது. 1988-இல் அப்பகுதி விவசாயிகளும் இவ்வழக்கில் இணைந்துகொண்டனர். அந்த வழக்கின் தீர்ப்பு 1997-இல் வந்தது. அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் மாசுபாட்டைத் தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு, அதற்கான நிதியை ஒதுக்கி, ஒருமாதம் தொழிற்சாலையை நிறுத்தி வைத்து, உரிய கருவிகளைப் பொருத்திய பிறகு ஆலை இயங்கிட உத்தரவிட்டார்.

இப்போது சொல்லுங்கள்... தமிழ்நாடு, தமிழர்களின் வளர்ச்சியில் கலைஞர் கொண்டிருந்த அன்பு 'அரசு' சிமெண்ட் போன்று 'வலிமை'யானது தானே..!

...வலம் வருவோம்

## மொழிப் போராட்டப் படத்துக்கு சிக்கல்!

அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவை தமிழ்நாட்டுக் கோயில்களில் நேரலை செய்யாவிடில், கருத்துரிமை என்னாவது என்றெல்லாம் பா.ஜ.க.வினர் பேசினார்கள். கோயில் திறப்பு விழா என்பது மதம் சார்ந்த ஒரு நிகழ்வு. அதற்கே கருத்துரிமை எங்கே என்று பொங்கியவர்கள், இப்போது உண்மையிலேயே கருத்துரிமைக்காகக் குரல் கொடுப்பதற்கான நியாயமான காரணம் கிடைத்திருக்கிறது.

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பிரபல இயக்குநரான சௌமியா சென்குப்தா 'பங்க்ளார் முக் அமி தேகியாச்சி' என்ற ஆவணப்படத்தை உருவாக்கியுள்ளார். இந்தித் திணிப்பை 'இந்தியா' எதிர்க்கிறது என்பது இந்த ஆவணப் படத்தின் கருப்பொருள். தமிழ்நாட்டில் அண்ணா, கலைஞர் முன்னெடுத்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தையும் இதில் குறிப்பிட்டிருக்கிறார் இயக்குநர். ஆனால், இந்த ஆவணப் படத்துக்கு மேற்கு வங்க சென்சார் போர்டு சான்றிதழ் கொடுக்க மறுத்திருக்கிறது. பா.ஜ.க.வைச் சேர்ந்த கருத்துரிமைக் காவலர்களைத்தான் இன்னும் காணவில்லை!

இந்தித் திணிப்பு முயற்சிகளை ஒரு நூற்றாண்டுக்கு முன்பே சரியாகப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றிய மாநிலம் தமிழ்நாடு. தமிழ்நாட்டின் இந்தித் திணிப்பு எதிர்ப்பு நியாயமான உணர்வு என்பதை, இப்போது பிற மாநிலங்களும் புரிந்துகொள்ளத் தொடங்கியிருக்கின்றன, என்பதற்கான வெளிப்பாடாகத்தான் இத்தகைய ஆவணப் படங்கள் அமைந்துள்ளன. இந்திதான் தேசியமொழி என்று பா.ஜ.க.வினர் துணிச்சலாகப் பேசத் தொடங்கியிருக்கும் இக்காலகட்டத்தில், இத்தகைய ஆவணப் படங்களைப் போற்றி வரவேற்க வேண்டியது நமது கடமை.

## :ப்ளாஷ்பேக்





அழகிரி

### துண்டு மகிழ்ச்சி!

1998-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சூறாவளிப் பிரச்சாரச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். இந்தச் சுற்றுப் பயணத்தின் போது, மயிலாடுதுறை வழுவூரில் பொதுக்கூட்டம் ஒன்றில் பங்கேற்றார். அந்தக் கூட்டத்தில் அவருக்குக் கைத்தறி ஆடைத் துண்டை அணிவித்தபோது நான் எடுத்துக்கொண்ட மகிழ்ச்சியான புகைப்படம் இது.

**-பி.ஜி.அழகிரி,**
**ஒன்றியத் துணை அமைப்பாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை,**
**மயிலாடுதுறை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங் கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சிறையில் நெகிழ்ச்சி!

**1950-இல் பெரியாரின் பொன்மொழிகள், அண்ணாவின் 'ஆரிய மாயை' நூல்களுக்கு அரசு தடை விதித்து, இருவரையும் கைது செய்தது. தி.மு.க.வும் தி.க.வும் பிரிந்து ஓராண்டுக்குப் பின்னர் பெரியாரும், அண்ணாவும் கைது செய்யப்பட்டு, ஒரே சிறையில் அடைக்கப்பட்டனர். பெரியார் கேள்விக் கணைகளை வீசினால்கூட பரவாயில்லை, அன்புக் கணைகளை வீசினால், எப்படித் தாங்குவேன் என ஐயமுற்றார் அண்ணா. சிறையில் தனக்கு வந்த பிஸ்கட்டுகளை அண்ணாவுக்குக் கொடுத்தார் பெரியார். 10 நாட்களுக்குப் பின் விடுதலையானபோது, தன் வாகனத்திலேயே அண்ணாவை அழைத்துச் சென்றார் பெரியார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 389




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.